


14.02.2025

தலைப்பு செய்திகள்

- பத்து ஆண்டு ராணுவ ஒத்துழைப்பு கட்டமைப்பிற்கான புதிய உடன்படிக்கையை பிரதமர் திரு. நரேந்திரமோடியும், அதிபர் டொனால்டு டிரம்பும் அறிவித்துள்ளனர்
- புல்வாமா தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தோரின் 6-வது ஆண்டு நினைவுதினம் இன்று அனுசரிக்கப் படுகிறது.
- தமிழகத்தில் பொதுமக்களின் சொந்த வீடு கனவு திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- மகளிர் உரிமைத்தொகை திட்டம் விரைவில் விரிவாக்கம் செய்யப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- டெல்லியில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் கலியண்ட பூனாச்சா, ஸிம்பாப்வேயின் ஜான்லாக் இணை இன்று களமிறங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியா – அமெரிக்க நாடுகளிடையே பெரிய அளவிலான 10 ஆண்டு ராணுவ ஒத்துழைப்பு வரைவுத்திட்ட ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

வரும் 2035-ம் ஆண்டு வரை நடைமுறையில் இருக்கும் இந்த ஒப்பந்தத்தால் இருநாடுகளுக்கு இடையிலான ராணுவ ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திரமோடி, அமெரிக்க தலைநகர் வாஷிங்டன் DC -யில், அதிபர் டொனால்டு டிரம்புடன் மேற்கொண்ட இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இருதலைவர்களும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இருநாடுகளும் இணைந்து ராணுவ தளவாட உற்பத்தியை முன்னெடுத்து செல்வதோடு நிலம், வான் சார்ந்த பரஸ்பர கொள்முதல் திட்டங்களை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தக நட்புறவை மேலும் வலுப்படுத்துவதோடு, தேச பாதுகாப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம் உள்ளிட்டவற்றில் வளர்ச்சியை உறுதி செய்யும், நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இருதலைவர்களும் உறுதிபூண்டனர்.

இந்நிலையில் இருதலைவர்களும் பரஸ்பர நலன் பயக்கும் பல்முனை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான முதல்கட்ட பேச்சுவார்த்தைகளை இந்த ஆண்டு மேற்கொள்ளவுள்ளதாக வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது 2 நாள் அமெரிக்க பயணத்தை முடித்துக்கொண்டு தாயகம் புறப்பட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

பிரதமர் – புத்தர்

இதனிடையே தாய்லாந்தில் நடைபெறும் சம்வாத் புத்த சமய மாநாட்டிற்கு காணொலி வாயிலாக வாழ்த்து தெரிவித்த பிரதமர் இந்தியா, தாய்லாந்து நாடுகளுக்கு இடையே தொன்றுதொட்டு நிலவும் வரலாற்று கலாச்சார பிணைப்பை எடுத்துரைத்தார்.

இந்தியாவின் கிழக்குசார் கொள்கையும், தாய்லாந்தின் மேற்கு சார்ந்த கொள்கையையும் பரஸ்பரம் பாராட்டிய அவர், இது வளத்திற்கான பாதையாக உள்ளது என்பதை சுட்டிக்காட்டினார். தாய்லாந்தில் நடைபெறும் சம்வாத் மாநாடு இருநாடுகளுக்கு இடையே உள்ள நட்புறவின் வெற்றியை பறைசாற்றுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

மாறிவரும் உலக சூழலில் மனநலம் சார்ந்த நடவடிக்கைகள் இன்றியமையா பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் வாழும் கலை அமைப்பு சார்பில் 10வது சர்வதே மகளிர் மாநாட்டை சற்றுமுன் துவக்கிவைத்து உரையாற்றிய அவர்,

நம்முடைய வாழ்க்கையில் பல்வேறு அம்சங்களோடு மனநலம் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

மகளிர் தத்தம் குடும்பத்தாரின் மனநலத்தை பேணி முன்னெடுத்துச் செல்வதன் மூலம் நாடு வளம் பெறும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாக இருக்கும் என்று சுட்டிக்காட்டிய குடியரசு தலைவர், இளையோரின் பங்களிப்பையும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

டொனால்ட் டிரம்ப்

பிரிக்ஸ் நாடுகள், டாலருக்கு மாற்றாக கரன்சியை கொண்டுவந்தால் கடும் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

இந்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பிரிக்ஸ் நாடுகளுக்கு 100 சதவிகித வரி விதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பிரிக்ஸ் அமைப்பில் உள்ள பெரும்பாலான உறுப்பு நாடுகள் பொதுவான கரன்சி குறித்து விவாதிக்க விரும்பவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரிக்ஸ் அமைப்பில் உள்ள இந்தியா ஏற்கனவே மாற்றுகரன்சி யோசனையை நிராகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

பிரதமர் – புல்வாமா

புல்வாமா தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தோரின் 6-வது ஆண்டு நினைவுதினம் இன்று அனுசரிக்கப் படுகிறது.

2019-ம் ஆண்டு புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பிரதமர் திரு. நரேந்திரமோடி தேசத்திற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களின் தியாகமும், அர்ப்பணிப்பும் என்றென்றும் நினைவுகூறப்படும் என்று தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா, பி.ஜே.பி. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு

தீவிரவாதத்திற்கு எதிராக எந்த சமரசத்தையும் செய்துகொள்ளாது என்று குறிப்பிட்டார்.

இந்த தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்த வீரர்களின் துணிச்சல், வலிமையான தேசத்தை நோக்கி நம்மை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் புல்வாமா மாவட்டத்தில் 2019-ம் ஆண்டு நடைபெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தில் 40 மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்கள் வீர மரணம் அடைந்தனர்.

❖❖❖❖❖❖

அண்ணாமலை

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் அதிகரித்து வரும் உயிரிழப்புகளை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசு மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்பவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் பொதுமக்களின் சொந்த வீடு கனவு திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை வர்த்தக மையத்தில் வீடு விற்பனை தொடர்பான கண்காட்சிணை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், மாநிலத்தில் கட்டிட அனுமதியை எளிதில் பெற சுயசான்றிதழ் திட்டத்தின் கீழ் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலனடைந்திருப்பதாக குறிப்பிட்டார்.

மாநிலத்தின் மக்கள் தொகையில் 48 சதவிகிதம் பேர் நகரங்களில் வசிப்பதாகவும், சென்னையில் சுற்றியுள்ள பகுதிகளில் நிலையான வளர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

.. வாய்ஸ் ..

இதனிடையே உயர்கல்வி துறை சார்பில் திருச்சி சேதுராப்பட்டி அரசு பொறியியல் கல்லூரி உட்பட மாநிலம் முழுவதும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள், பல்கலைக் கழகங்களில் 120 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பில் வகுப்பறை ஆய்வக கட்டிடங்கள்,

உள்விளையாட்டு அரங்கங்களை முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் திறந்து வைத்தார்.
மேலும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் மதுரை, தேனி மாவட்டங்களில் அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 6 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடங்களையும்,
புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கோடியே 41 கோடி ரூபாய் மதிப்பில் கிருஷ்ணாஜி பட்டினம் அரசு உயர்நிலைப்பள்ளியில் நூலகம் மற்றும் அறிவியல் ஆய்வக கட்டிடம் உள்ளிட்டவற்றையும் முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖

உதயநிதி
தமிழ்நாட்டில் மகளிர் உரிமைத்தொகை திட்டம் விரைவில் விரிவாக்கம் செய்யப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், தற்போது ஒருகோடிக்கும் அதிகமான மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வரும் நிலையில், அடுத்த 3மாதங்களில் பயனாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

எ.வ.வேலு
திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் நவீன தொழில்நுட்பத்தில் நான்கு மாடவீதிகளில் கான்கிரிட் சாலைகள் அமைக்கப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

மாட வீதிகளில் கான்கிரிட் சாலை அமைக்கும் இரண்டாம் கட்ட பணிகளை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், லட்சக்கணக்கான பக்தர்களின் வருகை கருத்தில் கொண்டு மாடவீதிகளில் பேருந்து போக்குவரத்து தடைசெய்யப்பட்டு மாற்றுப்பாதையில் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖

கே.பி. ராமலிங்கம்
பெற்றோர் ஆசிரியர் கழக பொறுப்பில் உள்ள திமுக நிர்வாகிகளை உடனடியாக நீக்க வேண்டும் என்று பி.ஜே.பி. மாநில துணைத்தலைவர் திரு. கே.பி. ராமலிங்கம், மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியார்களிடம் பேசியஅவர், இம்மாவட்டம் ஆத்தூர் அருகே, அரசு பள்ளி பாலியல் சம்பவத்தில் சமரசம் ஏற்படுத்தப்பட்டதை குறைகூறியுள்ளார்.
மாணவ மாணவிகள் பாதுகாப்பு பிரச்சனையில் சமரசத்திற்கே இடமில்லை என்று கூறிய அவர், இவ்விஷயத்தில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் சமரசம் ஏற்படுத்தியிருக்க கூடாது என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் திமுக நிர்வாகிகளே பெற்றோர் ஆசிரியர் கழக பொறுப்பில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கேள்விகுறியாக உள்ளது என்று அவர் குறைகூறினார்.

❖❖❖❖❖❖

மயிலாடுதுறை வாய்ஸ்
மயிலாடுதுறை மாவட்டத்தில் அவசரகாலங்களில் விபத்து நேரிட்டால் தற்காத்து கொள்வது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கன்னியாகுமரி வாய்ஸ்
கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மலர்ச்சந்தையில் இன்று, ரோஜா பூக்களின் விலை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கள்ளக்குறிச்சி வாய்ஸ்
கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 3-வது புத்தகத்திருவிழா இன்று தொடங்கி 10 நாட்கள் நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

இருவரி
தமிழகத்தில் நகராட்சி நிர்வாகத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து இத்துறைக்கான அமைச்சர் திரு.கே.என்.நேரு சென்னையில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖

விபத்து

ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த 3 பேர் ராமநாதபுரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விருதுநகர் மாவட்டத்திலிருந்து ராமேஸ்வரத்திற்கு சென்ற கார்மீது மதுரை நோக்கி சென்றுகொண்டிருந்த பேருந்து மோதியதில் இவ்விபத்து நேரிட்டது.

❖❖❖❖❖❖

கோவில்

கோவை பொள்ளாச்சி அருகே அமைந்துள்ள ஆனைமலை மாசானிஅம்மன் திருக்கோவில் குண்டம் திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் குண்டம் இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர். தொடர்ந்து பக்தர்கள் நீண்டவரிசையில் காத்திருந்து அம்மனை வழிபட்டனர்.

❖❖❖❖❖❖

டென்னிஸ்

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரித்விக் போலிப்பள்ளி, கொலம்பியாவின் நிக்கோலஸ் இணை - அமெரிக்க இணையை இன்றிரவு எதிர்கொள்கிறது.

டெல்லியில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் கலியண்ட பூனாச்சா, ஸிம்பாப்வேயின் ஜான்லாக் இணை - இங்கிலாந்து, டென்மார்க் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டிகள் வதோதராவில் இன்று தொடங்குகின்றன.

முதல் போட்டியில் குஜராத் ஜெயன்ட்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை இன்றிரவு ஏழரை மணிக்கு எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.